//தேர்வுகள் அவசரம்//

**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**

**ந.க.எண்.2523 /ஆ4 /2022 நாள். -07-2022**

| | |
|---|---|
| **பொருள்** : | பள்ளிக் கல்வி – போட்டித் தேர்வுகள் ஒருங்கிணைந்த குடிமைப் பணியியல் தேர்வு IV [ Group IV Services ] பல்வேறு பதவிகளுக்கான போட்டித் தேர்வு 24-07-2022 ஞாயிற்றுக்கிழமை நடைபெறுதல் தேர்வு மைய தலைமைஆசிரியர்களுக்கான அறிவுரை –சார்பு. |
| **பார்வை** : | வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் முதன்மை ஒருங்கிணைப்பாளர் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் வேலூர் மாவட்டம் வேலூர் -9 அவர்களின் கடித ந.க.டி5/3531/2022 நாள். .07.2022 |

-----

பார்வையில் காணும் கடித ஆணைங்கிணங்க தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் ஒருங்கிணைந்த குடிமைப்பணி தேர்வு IV (Combind Civil Services Examination) [Group IV Services] பல்வேறு பதவிகளுக்கான போட்டித் தேர்வு வரும் 24-07-2022 ஞாயிற்றுக்கிழமை (முற்பகல் மட்டும்) வேலூர் மாவட்டத்தில் வேலூர், காட்பாடி, அணைக்கட்டு, குடியாத்தம், கே.வி.குப்பம், பேர்ணாம்பட்டு ஆகிய 6 மையங்களில் நடைபெற உள்ளது. வேலூர் மாவட்டத்தில் மொத்தம் 142 தேர்வு கூடங்களில் 41,307 தேர்வர்கள் தேர்வு எழுத உள்ளனர்.

18-07-2022 அன்று தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய தலைவர் அவர்களால் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு காணொளி வாயிலாக ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது. மேற்படி ஆய்வுக் கூட்டத்தில் Group IV தேர்வில் கண்காணிப்பாளர்களாக ஆசிரியர்களே நியமிக்கப்பட வேண்டும் எனவும் ஆசிரியரல்லாத பிற பணியாளர்களை நியமிக்க கூடாது எனவும், கண்காணிப்பாளர்கள் பற்றாக்குறை இருக்கும் பட்சத்தில் முன்கூட்டியே வேறு பள்ளிகளில் இருந்து ஆசிரியர்களை நியமிக்குமாறு பார்வை கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே வேலூர் மாவட்டத்தில் மேற்படி தேர்வு நடைபெறும் தேர்வு கூடங்களில் கண்காணிப்பாளர்களாக ஆசிரியர்கள் மட்டுமே நியமனம் செய்ய வேண்டுமென்றும் ஆசிரியர்கள் பற்றாக்குறை இருப்பின் முன்கூட்டியே வேறு பள்ளிகளில் உள்ள ஆசிரியர்களை கண்காணிப்பாளராக நியமனம் செய்யுமாறும், தேர்வுக்கூடங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு 23-07-2022 மற்றும் 24-07-2022 ஆகிய இரண்டு நாட்களும் விடுமுறை அளிக்க கூடாது எனவும் முதன்மை கண்காணிப்பாளர்களுக்கு அறிவுறுத்தபடுகிறது. மேலும் அனைத்து பள்ளிகளிலும் மின்விசிறி, மின் விளக்குகள், இருக்கைகள் ஆகிய அடிப்படை வசதிகளில் குறைபாடு

காணப்படின் அதை உடனடியாக சரி செய்யுமாறு முதன்மை கண்காணிப்பாளர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது. இதனை அனைத்து தேர்வு மைய முதன்மை கண்காணிப்பாளர்கள் மற்றும் சார்ந்த பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

மேலும் தேர்வுநாளில் எவ்வித புகார்களுக்கும் இடமளிக்காமல் செயல்படுமாறு தேர்வு மைய தலைமை ஆசிரியர்களுக்கு திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகிறது.

ஓம் XXXXXXXX
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்- முதன்மை கண்காணிப்பாளர் மற்றும் தலைமை ஆசிரியர்கள் தேர்வு மைய பள்ளிகள்

நகல்-

1. வேலூர் , மாவட்டக் கல்வி அலுவலர் அவர்களுக்கு தொடர் நடவடிக்கையின் பொருட்டு அனுப்பலாகிறது.

2. வேலூர், மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் முதன்மை ஒருங்கிணைப்பாளர் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், வேலூர் மாவட்டம், வேலூர்-9 அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பலாகிறது.